# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன்**, இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 17/ந/2025
நாள்:. 07.07.2025

திரு. P. கோபால்சாமி,
திருவண்ணாமலை மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருவண்ணாமலை நகராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம். ... எதிர்மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் ரோடு, திருவள்ளுவர் நகர் கதவு எண். 821/153 என்ற முகவரியை சேர்ந்த திரு. P. கோபால்சாமி என்பவரது 15.12.2023 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.12.2023 அன்று பெறப்பட்டு, 17/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவண்ணாமலை மாவட்டம், வேட்டவலம் ரோடு, திருவள்ளுவர் நகர் கதவு எண். 821/153 என்ற முகவரியை சேர்ந்த திரு. P. கோபால்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"குடியிருப்பு பகுதியில் பட்டறைகள் வைக்க அனுமதி பெறாமல் தொழில் செய்து வருவதால் குழந்தைகள் கல்வியில் கவனச் சிதறல் ஏற்படுகிறது. சுற்றுச்சூழல் பாதிப்பு, நீர், காற்று, ஒளி, ஒலி மாசு ஏற்படுகிறது.

1) தொடர்ந்து பலமுறை புகார் மனு கொடுத்தும் அறிவிப்பு மட்டும் கொடுத்த நிலையில் எந்த வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

2) கடந்த மூன்று ஆண்டுகளாக அலைகழித்துவிட்டு உதாசீனப்படுத்தி, கடைசியாக உங்கள் வார்டு கவுன்சிலரிடம் பேசி விட்டேன் என்று நகராட்சி சுகாதார ஆய்வாளர் கூறினார்.

3) புகார் கொடுத்தற்காக என்னை ஏளனமாக பேசி ஒருதலைபட்சமாக நடந்துகொண்டனர்.

4) அரசாங்க அலுவலர்கள் சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல், நான் அளித்த புகார் மனுக்கள் குறித்து யார் மீது புகார் கொடுக்கப்பட்டதோ அவர்களுக்கே அனைத்து தகவல்களும் அலுவலர்களுக்கு சென்றுவிடுகிறது.

5) இவர்களால் நான் என் பணியை செய்ய முடியாமலும் மிகுந்த மன அழுத்தம் மற்றும் மன உளைச்சலும், பண விரயமும், அதிக பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

6) நடவடிக்கை எடுக்காத நகராட்சி ஆணையர், நகராட்சி சுகாதார அலுவலர் ஆகியோர் மீது சட்டப்படி துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும், மேலும் என் புகார் மனு மீது நடவடிக்கை எடுக்கவும் ஆவன செய்யுமாறும் தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது வீடானது, திருவண்ணாமலை மாவட்டம், திருவள்ளுவர் நகர் பிரதான சாலையில் குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக வீட்டின் எதிரே அருகருகே இரண்டு லேத் பட்டறைகள் செயல்பட்டு வருகிறது. லேத் பட்டறைகள் (1) அண்ணாமலையார் இஞ்சினியங் ஒர்க்ஸ் (உரிமையாளர் த. குமார்) (2) பாலாஜி எர்த் ஒர்க்ஸ் (உரிமையாளர் ரா.குமார்) குடியிருப்பு பகுதியில் அனுமதி பெறாமல் நடத்தி வருகின்றனர்.

மேற்கண்ட லேத்பட்டறைகள் தினமும் காலை 06.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை தொடர்ந்து செயல்பட்டு வருவதன் மூலம் தினமும் பலவிதமான இன்னல்களை சந்திக்க நேரிடுகிறது.

1) குழந்தைகளின் கல்வியில் கவனச்சிதறல், தொடர்ந்து கல்வி கற்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

2) பள்ளிக் குழந்தைகள், கல்லூரி மாணவ மாணவிகள், வயது முதிர்ந்தோர், குடியிருப்பு வாசிகள், வளர்இளம் பெண்கள், இல்லத்தரசிகள் ஆகியோர் பிரதான சாலையில் செல்வதற்கு அச்சப்பட்டு தயக்கத்துடனும் பயத்துடன் சென்று வருகின்றனர்.

3) இவ்விரு லேத்பட்டறைகளில் பகல் பொழுதிலேயே பொது வெளியில் மது அருந்துவது, புகை பிடிப்பது, தகாத வார்த்தைகளால் பேசுவது போன்ற இழிவான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

4) குடியிருப்பு பகுதியில் சிறுநீர் கழிப்பது, குப்பைகளை கொட்டி எரிப்பது, கழிவு நீர் கால்வாயில் கழிவுகளை கொட்டி அருகிலுள்ள குடியிருப்புகளுக்கு நோய் தொற்று ஏற்படும் அபாயத்தை ஏற்படுத்துகின்றனர்.

5) 50 அடி நகராட்சி சாலையில் சுமார் 20 அடிக்கு மேல் ஆக்கிரமித்து நாள்தோறும் பொருட்களை போட்டு போக்குவரத்திற்கு இடையூறு செய்து வருகின்றனர்.

6) இரும்பு அறுக்கும் இயந்திரம், வெல்டிங் மிஷின், சம்மட்டி கொண்டு அடித்தல், இரும்பிற்கு அடிக்கும் (ரெட் ஆக்சைட்) பெயிண்ட் இதன் மூலம் வெளிவரும் பெயிண்ட் வாடை, புகை, ஒலி, ஒளி, காற்று மாசு, சுற்று சூழல் பாதிப்பு ஆகியவற்றால் குழந்தைகளுக்கும், முதியோர்களுக்கும், இக்குடியிருப்பு

வாசிகளுக்கும் வாந்தி, குமட்டல், மயக்கம், தலைசுற்றல், நெஞ்சுவலி போன்ற சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது.

7) இவர்கள் வேலை செய்யும் போது அதன் மூலம் ஏற்படும் தீப்பொறியானது எதிரே உள்ள என்வீட்டின் முன்புறம் நிறுத்தியுள்ள இரு சக்கர வாகனத்தின் மீது படுவதால் தீப்பிடிக்கும் அபாயம் உள்ளது.

8) வீட்டின் முன்புறம் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தி பழுது பார்க்கும் பணி செய்கின்றனர். இதனால் வீட்டிற்கு சென்று வர முடியவில்லை. இது குறித்து கேட்டதற்கு இது என்ன உங்க வீட்டு இடமா, அப்படித்தான் நிறுத்துவோம் என்று மிரட்டும் தோரணையில் பேசுகின்றனர்.

9) இரும்பு அறுக்கும் இயந்திரத்தின் மூலம் ஏற்படும் பயங்கர இரைச்சல் (சத்தம்), நெருப்பு மற்றும் வெல்டிங் செய்யும்போது ஏற்படும் புகை மற்றும் கண் கூசும் அளவிற்கு ஏற்படும் வெளிச்சம், சம்மட்டி கொண்டு இரும்பை அடிக்கும்போது ஏற்படும் அதிர்வு மற்றும் சத்தம் போன்றவற்றால் இக்குடியிருப்பு பகுதியில் வசிக்க இயலாத சூழல் நிலவுகிறது.

10) இக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள இவ்விரு லேத்பட்டறைகள் மூலம் ஏற்படும் பாதிப்பானது இக்குடியிருப்பு வாசிகளை விட எதிரே உள்ள எனது குடும்பத்திற்கும் எனது வீட்டிற்கும் அதிகமான பாதிப்பை தினந்தோறும் ஏற்படுத்துகிறது. இதனால் நாங்கள் அதிக மன உளைச்சலுடனும் மன அழுத்தத்தடனும் வாழ்ந்து வருகிறோம்.

11) மேற்கண்ட பாதிப்புகளால் நாங்கள் அனைவரும் வீட்டுசிறையில் உள்ள கைதிகளைபோல் அனைவரும் இருந்து வருகிறோம். குழந்தைகள் கொஞ்ச நேரம் கூட வெளியே வந்து விளையாடவோ, குடும்ப பெண்கள் அக்கம் பக்கத்தில் உள்ள குடியிருப்பு வாசிகளிடம் பேசிக்கொள்ளவோ இயலாத நிலையில் வீட்டு சிறையில் இருந்து வருகிறோம்.

12) சம்பந்தப்பட்ட இடத்தின் உரிமையாளரிடம் சென்று முறையிட்டதற்கு, நீ என்ன காலை 6.00 மணி வரைக்குமா தூங்குகிறாய் என்று ஏளனமாய் பேசுகிறார். தொல்லையாக இருந்தால் வீட்டை காலி செய்து விட்டு, வேறு இடத்திற்கு சென்று விடு என்று இடத்தின் உரிமையாளரும் பட்டறை நடத்தும் திரு. குமார் (கடை வாடகைதாரர்) என்பவரும் தகாத வார்த்தையில் பேசுகிறார்கள்.

13) அதே தெருவில் பட்டறை நடத்தும் திரு. குமார் என்பவரின் வீடும் தெருவின் கடைசியில் உள்ளது. அங்கு பட்டறை நடத்தினால் அருகிலுள்ள குடியிருப்பு வாசிகளுக்கு தொந்தவராக இருக்கும் என்பதால் அவர் சொந்த இடத்தில் பட்டறை வைக்கும் வசதி இருந்தும், அருகே உள்ள குடியிருப்பு வாசிகள் அனுமதிக்கவில்லை என்பதால் வாடகை இடத்தில் வைத்து நாங்கள் குடியிருக்கும் பகுதியில் அதிக பாதிப்பு ஏற்படும் வகையில் தொழில் செய்து வருகிறார்.

இதுகுறித்து மூன்று ஆண்டுகளாக பலமுறை நகராட்சி ஆணையர், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், மின்சார வாரியம், மாவட்ட ஆட்சித்தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட தொழில் மையம், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்

வழங்கல் துறை இயக்குநரகம், முதலமைச்சரின் தனிப்பிரிவு ஆகியோருக்கு பலமுறை பதிவு தபால் மூலம் புகார் மனு அளித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதை தொடர்ந்து கடந்த மாதம் வீட்டிற்கு செல்லும் போது புகார் மனு அளித்தது தொடர்பாக மேற்கண்ட இரண்டு லேத் பட்டறை உரிமையாளர்கள் என்னையும், என் குடும்பத்தாரையும் தகாத வார்த்தைகளால் திட்டினார்கள். கேட்டதற்கு என்னை தாக்க முற்பட்டனர். வீட்டில் இருந்து வெளியே செல்லும்போதும் வீட்டிற்கு வரும்போதும் ஜாடை மாடையாக தகாத வார்த்தைகளால் திட்டி வருகின்றனர். வீட்டிலிருந்து இரண்டு சக்கர வாகனத்தில் வெளியே செல்லும்போது குறுக்கே வந்து விபத்து ஏற்படும் வகையில் நடந்து கொள்கின்றனர். இதை தொடர்ந்து நான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நேரில் சென்று புகார் அளித்தேன்.

மேலும், புகார் அளித்தது தொடர்பாக திருவண்ணாமலை நகரம், கிழக்கு காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைத்தனர். விசாரணையில் அது குடியிருப்பு பகுதி என்று தெரியவந்தது. அதற்கு பட்டறை உரிமையாளர்கள் குடியிருப்பு பகுதி இல்லை என்றும் இண்டஸ்ட்ரியல் பகுதி என்றும் கூறினர். அதற்குண்டான ஆவணத்தை சமர்ப்பிக்கும்படி விசாரணை மேற்கொண்ட ஆய்வாளர்கள் கேட்டதற்கு, பட்டறை உரிமையாளர்கள் இரண்டு நாள் கழித்து தருகிறோம் என்று கூறி சென்றுவிட்டு, பிறகு விசாரணைக்கு வந்த பட்டறை உரிமையாளர்கள் எங்களிடம் எந்த ஆவணமும் இல்லை என்று தெரிவித்தனர். அதை தொடர்ந்து நகராட்சி ஆணையரிடம் நேரில் அளித்த புகார் மனுவின் மூலம் மேற்கண்ட ஆய்வில் குடியிருப்பு பகுதியில் அனுமதி இல்லாமல் உரிமம் இல்லாமல் பட்டறைகள் நடத்தி வந்தது தெரிய வந்து நகராட்சி ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வின் மூலம் இது குடியிருப்பு பகுதி என்றும் இங்கு பட்டறைகள் செயல்பட அனுமதி இல்லை என்றும், பொதுமக்களுக்கும் அருகிலுள்ள குடியிருப்புகளுக்கும் பாதிப்பு ஏற்படாமல் நடத்துமாறும், தவறும்பட்சத்தில் நகராட்சி சட்டம் 1939–ன்படி, பட்டறைகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பு நோட்டீஸ் அளித்து விட்டு சென்றனர்.

இந்த அறிவிப்பு நோட்டீஸ் வந்தவுடன் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து நகராட்சி ஆணையருக்கு புகார் மனு கொடுத்தேன். பிறகு, நகராட்சி சுகாதார ஆய்வாளர் அவர்களை பலமுறை நேரில் சந்தித்து பாதிப்பு அதிகமாக உள்ளது விரைந்து நடவடிக்கை எடுங்கள் என்று கூற அதற்கு அவர் நகராட்சியின் நகர திட்ட ஆய்வாளர் (TPI) அவர்களை சந்திக்க கூறினார்.

நகராட்சியின் நகர திட்ட ஆய்வாளர் (TPI) அவர்களை சந்தித்து பாதிப்புகள் குறித்து கூறியதற்கு இது எங்கள் பணி இல்லை என்றும் நீங்கள் நகராட்சியில் சுகாதார ஆய்வாளரை தொடர்பு கொள்ளுங்கள் என்று கூறி அனுப்பினார். தொடர்ந்து பல மாதங்களாக நகராட்சி அலுவலகத்திற்கு சென்று நகராட்சி சுகாதார ஆய்வாளரை சந்திக்க முற்பட்டபோது சரியான பதிலை சொல்லாமல், அவர் சந்திப்பதையே தவிர்த்து வருகிறார். அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டால் நான் வெளியே இருக்கிறேன், பிறகு வந்து பார்க்கிறேன் என்று மட்டுமே தெரிவித்து வருகிறார்.

ஆனால் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 6 (1)ன் கீழ் பெறப்பட்ட தகவல்களின்படி, திருவண்ணாமலை நகரம், திருவள்ளுவர் நகர், வேட்டவலம் ரோடு பகுதி முழுவதும் குடியிருப்பு பகுதி என்றும், பட்டறைகள் வைப்பதற்கு அனுமதி இல்லை என்பது தெரியவந்தது.

ஆகையால், மேற்படி பகுதியில் செயல்படும் இரண்டு லேத்பட்டறைகளையும் குடியிருப்பு பகுதியிலிருந்து அகற்ற இதுநாள் வரை பலமுறை புகார் மனு நேரிலும் பதிவு தபால் மூலமும் அளித்தும் நடவடிக்கை மேற்கொள்ளாமல், நகராட்சி நிர்வாகம் பலமுறை நோட்டீஸ் அறிவிப்பு மட்டுமே அனுப்பிவிட்டு வேறு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் தற்காலிக பதிலை மட்டுமே அளித்து வருகின்றனர்.

எனவே, திருவள்ளுவர் நகர் முழுவதும் குடியிருப்பு பகுதி என்பதால் மேற்கண்ட இரண்டு லேத்பட்டறைகளையும் நிரந்தரமாக அகற்றி நிரந்தர தீர்வு காணும் வகையில் நாங்கள் (எனது குடும்பம் மற்றும் அருகே உள்ள குடியிருப்பு வாசிகள்) நிம்மதியுடனும் அமைதியுடனும் வாழவும் இந்த சுகாதார சீர்கேட்டிலிருந்து காப்பாற்றுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கண்ட லேத்பட்டறைகள் அமைந்துள்ள பகுதி குடியிருப்பு பகுதி என்று நகராட்சியில் தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005 பிரிவு 6(1)–ன் கீழ் தகவல்கள் கிடைக்கப்பெற்றதால் குடியிருப்பு பகுதியில் பட்டறைகள் வைப்பதற்கு அனுமதி இல்லை. எனவே, தொடர்ந்து அங்கு பட்டறைகள் நடத்தினால் பொதுமக்கள், பள்ளி குழந்தைகள் மற்றும் அருகே உள்ள குடியிருப்பு வாசிகள் அனைவருக்கும் பாதிப்புகள், தொல்லைகள் மற்றும் இடையூறுகள் ஏற்படும். எனவே, இரண்டு லேத் பட்டறைகளை நிரந்தரமாக இந்த குடியிருப்பு பகுதியிலிருந்து அகற்ற உத்தரவிடவேண்டும் என்று தங்களை கேட்டுக்கொள்கிறேன்" என கேட்டுக்கொண்டுள்ளார்.

2) மனுதாரரின் புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 11.01.2024 நாளிட்ட அறிவிப்பு கடிதத்தின் மூலம் திருவண்ணாமலை நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) திருவண்ணாமலை நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண்.0690/2024/எச்1, நாள் 20.02.2024–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். அதில் –

"திரு. பூ. கோபால்சாமி என்பவரின் புகார் மனுவின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட இடத்தினை நேராய்வு செய்து அனுமதியின்றி இயங்கி வரும் அண்ணாமலை கிரில் ஒர்க்ஸ் மற்றும் பாலாஜி எர்த் ஒர்க்ஸ் லேத் பட்டறை உரிமையாளர்களுக்கு பொது சுகாதார சட்டம், 1939 விதிகள் பிரிவு 41, 42, 43, 44 மற்றும் 134–ன் கீழ் 5 தினங்களுக்குள் தங்கள் தொழில் செய்யும் இடத்தை பொது மக்களுக்கு இடையூறு இன்றி வேறு இடத்திற்கு மாற்றம் செய்திட அறிவுறுத்தி அறிவிப்பு நோட்டிஸ் சார்பு செய்யப்பட்டும், பொதுமக்களுக்கு தொல்லை தருவதாக கருதியும் மேற்குறித்த சட்ட பிரிவுகளின்படி நீதிமன்றம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவுறுத்தப்பட்டு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திருவண்ணாமலை நகராட்சி ஆணையர் தனது கடித ந.க.எண். 690/2024/எச்1, நாள் 21.10.2024–ல் கீழ்க்கண்டவாறு தனது இரண்டாவது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

"திருவண்ணாமலை நகராட்சி ஆணையரின் அறிவிப்பு கடிதம் ந.க.எண். 2188/2024/எச்1, நாள் 22.05.2024 மூலம் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இயங்கும் இரும்பு பட்டறைகளை காலி செய்ய அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளதாகவும்,

திரு. பூ.கோபால்சாமி என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, வழக்கு எண். W.P.No.17010/2024– ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின்படி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இயங்கும் இரும்பு பட்டறைகளை பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், திரு. A.R. சிவக்குமார் மற்றும் D. குமார் என்பவர்களால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட மேல்முறையீடு வழக்கு எண்.W.P.No.28924/2024 மற்றும் W.M.P.Nos.31565 மற்றும் 31566/2024, வரும் 05.11.2024ல் வழக்காடு மன்றத்திற்கு வர உள்ளதால், வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் தெரிவிக்கப்படுகிறது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மனுதாரரின் புகார் மனு, திருவண்ணாமலை நகராட்சி ஆணையரின் அறிக்கைகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

இந்நேர்வில், புகார் மனுதாரர் திரு. பூ.கோபால்சாமி என்பவரால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, வழக்கு எண். W.P.No.17010/2024– ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையின்படி பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் இயங்கும் இரும்பு பட்டறைகளை பூட்டி சீல் வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில், திரு. A.R. சிவக்குமார் மற்றும் D. குமார் என்பவர்களால் திருவண்ணாமலை நகராட்சி ஆணையரின் அறிவிப்பு ந.க.எண். 2188/2024/எச்1, நாள் 18.04.2024 மற்றும் 22.05.2024 நாளிட்ட அறிவிப்புகளை ரத்து செய்யக்கோரி மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P.No.28924/2024 மற்றும் W.M.P.Nos.31565 மற்றும் 31566/2024, வரும் 05.11.2024ல் வழக்காடு மன்றத்திற்கு வர உள்ளதால், வழக்கின் தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திருவண்ணாமலை நகராட்சி ஆணையரின் அறிக்கையின் வாயிலாக தெரியவருகிறது. எனவே, மேற்படி வழக்கு W.P.No.28924/2024 மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளதை அறியமுடிகிறது .

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10(3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:–

Sec. "10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,-

(a) xxxxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;"

எனவே, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b) ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்தலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, ஜுலை திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. P. கோபால்சாமி
கதவு எண். 821/153, திருவள்ளுவர் நகர்,
வேட்டவலம் ரோடு,
திருவண்ணாமலை மாவட்டம்,

2) ஆணையாளர்,
திருவண்ணாமலை நகராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்